# சங்ககால வாழ்வியல் புலப்படுத்தும் சமூக நல்லிணக்கம் – ஒருநோக்கு

**Mr. K. Thavaseelan**
*Ph.D Scholar, Faculty of Graduate Studies*
*Eastern University, Sri Lanka*

**Prof. Dr. (Mrs). S. Kesavan**
*Professor in Hindu Civilization, Faculty of Arts & Culture*
*Eastern University, Sri Lanka*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7730

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழ் இலக்கிய வரலாற்றிலே கி.பி மூன்றாம்நூற்றாண்டு வரையான காலகட்டத்தில் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனும் மூன்று சங்கங்களின் ஊடாகத் தமிழை வளர்த்ததாக நம்பப்படுகின்ற காலம் சங்ககாலம் ஆகும். இக்காலகட்டம் மன்னர் ஆட்சிக் காலமாக விளங்கியதுடன் குழுமுறையிலான அமைப்புக்களும் அவற்றிற்கிடையிலான போட்டிகளும் போர்களும் நிறைந்திருந்தன. குறுநில மன்னர்கள் மூவேந்தர் ஆட்சிக்கு உதவினர். இக்காலமன்னர்கள் மக்கள் நலன் பேணுபவர்களாக இருந்திருக்கின்றனர். ஆட்சியில் அரசர்களுக்கு அறிவுரை கூறி மக்களும் அரசர்களும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துபவர்களாக அமைச்சு அந்தஸ்த்து பெற்ற அவைக்களப்புலவர்கள் அமைந்திருந்தனர். இத்தகைய காலத்திலே மக்களும் அரசர்களும் தமிழ் நாட்டிற்குள் மட்டுமன்றி ஏனைய நாடுகளுடனும் நல்ல தொடர்புகளை வைத்திருந்தனர். இதனை அக்காலத்தில் கிடைக்கப்பெற்ற இலக்கியங்கள் மூலமாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் சமூக நல்லிணக்கக் கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சமூக நல்லிணக்கம் என்பது ஒரு சமூகத்தில் தனிநபரிடையே அல்லது குழுக்களிடையே காணப்படும் ஒரு புரிந்துணர்வு, ஒரு விட்டுக்கொடுக்கும் தன்மை குழுக்களிடையே காணப்படும் ஒற்றுமை என்பவையே சமூக நல்லிணக்கம் எனப்படுகிறது. சங்க காலத்தில் சாதிக் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. அனைவரும் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அதனால் ஒரு புரிந்துணர்வும் ஒருவரோடு ஒருவர் இணங்கிப் போகின்ற தன்மையும்அதன்வழி அவர்களிடையே நல்ல இணக்கமும் பேணப்பட்டது. இத்தகைய சங்ககால வாழ்வியல் புலப்படுத்தும் சமூக நல்லிணக்க சிந்தனையானது ஒவ்வொரு மனிதனும் நல்லிணக்கம் என்கின்ற நிலையை அடைவதற்கு இட்டுச் செல்கின்ற அதேவேளை அன்பு, கருணை, பக்தி, பொறுமை, தர்மம், சமரசம், பொறை முதலிய நல்லிணக்கத்தோடு வாழ்வதற்குரிய உத்திகளையும் தன்னகத்தே கட்டமைத்துள்ளமையினால், சங்ககால வாழ்வியலானது மனிதன் உடல், உள, ஆன்மீக ரீதியாக ஒருமைப்படுவதற்குரிய நல்லிணக்க சிந்தனைகளையும் கொண்டு காணப்படுகிறதா? என்கின்ற பிரச்சினை எழுகிறது. ஆகவே அதற்கு தீர்வு காணுகின்ற வகையில் சங்ககால வாழ்வியலானது எவ்வாறு சமூக நல்லிணக்க சிந்தனைகளைத் தன்னகத்தே கட்டமைத்துள்ளது என்பதனை ஆராய்ந்து இளம் சமுதாயத்தினருக்கு அது பற்றிய அறிவையும்*

*தெளிவையும் ஏற்படுத்தி அதன்வழி வாழ வழிகாட்டும் நோக்கோடு சங்ககால இலக்கியங்களை மாத்திரம் ஆய்வு எல்லையாகக் கொண்டு ஒப்பிட்டு ஆய்வு முறைமை, வரலாற்றியல் ஆய்வு முறைமை, விபரண ஆய்வு முறைமை என்னும் ஆய்வுமுறையியல்களூடாக இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகிறது. இவ்வாய்வுப் பெறுகையானது சமகாலத்தில் மக்கள் இன, மத, சமூக, உடல், உள, ரீதியாக ஒருமைப்பட்டு நல்லிணக்கத் தின் வழி வாழ பெரிதும் வழிகாட்டும்.*

***திறவுச் சொற்கள்:*** *வாழ்வியல், நல்லிணக்கம், அன்பு, பொறுமை, சங்ககாலம்,பொறை*

## அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றிலே கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையான கால கட்டத்தில் முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனும் மூன்று சங்கங்களின் ஊடாக தமிழை வளர்த்ததாக நம்பப்படுகின்ற காலம் சங்ககாலமாகும். இக்காலப்பகுதியில் வாழந்த மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கைமுறை நடத்தியதனால் இக்காலப்பகுதி இயற்கைநெறிக் காலம் என அழைக்கப்பட்டது. இக்காலகட்டம் மன்னர் ஆட்சிக்காலமாக விளங்கியிருந்தாலும் குழுமுறையிலான அமைப்புகளும் அவற்றுக்கிடையிலான போட்டிகளும் போர்களும் நிறைந்து இருந்தன. பெருநில மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்களும் இக்காலத்தில் ஆட்சி செய்ததோடு குறுநில மன்னர்களான பாரி, ஓரி, காரி, ஆய், நள்ளி, பேகன், அதியமான் முதலியோரும் இம்மூவேந்தர் ஆட்சிக்கு உதவினர். பொதுவாக இம்மன்னர்கள் மக்கள் நலன் பேணுபவர்களாக இருந்திருக்கின்றனர். ஆட்சியில் அரசர்களுக்கும் அறிவுரை கூறி மக்களுக்கும் அரசர்களுக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துபவர்களாக அமைச்சு அந்தஸ்து பெற்ற அவை புலவர்கள் அமைந்து இருந்திருக்கின்றனர். இத்தகைய காலத்திலே மக்களும் அரசர்களும் தமிழ் நாட்டுக்குள் மட்டுமன்றி ஏனைய நாடுகளுடன் நல்ல தொடர்புகளை வைத்திருந்தனர். இதனை அவர்களுடைய வாணிபத்தின் ஊடாக அறிய முடிகிறது. இது குறித்த தகவல்களை அக்காலத்தில் கிடைக்கப்பெற்ற நாணயங்கள், இலக்கியங்கள் என்பவற்றினூடாக அறிந்து கொள்ள முடிகிறது.

இக்காலத்தில் தோன்றிய எட்டுத் தொகை பத்துப்பாட்டு நூல்களாக பதினெட்டு மேற்கணக்கு நூல்கள் தோன்றின. அவை அகத்தனை சார்ந்தவை, புறத்திணை சார்ந்தவை, அகமும் புறமும் சார்ந்தவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அகத் திணை நூல்களாக அகநானூறு, நற்றிணை நானூறு, கலித்தொகை, குறுந்தொகை, ஐங்குநூறு, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு என்பனவும் புறத்திணை நூல்களாக புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை,பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி என்பனவும் அகமும் புறமும் சார்ந்ததாகபரிபாடல் மற்றும் பட்டினப்பாலை என்பனவும் அகமா? புறமா? என்ற சர்ச்சைக்குரியதாக நெடுநல்வாடை என்றநூலும் குறிப்பிடப்படுகிறது.இத்தகைய இலக்கியங்கள் சமூக நல்லிணக்க சிந்தனைகளைத் தம்மகத்தே கொண்டனவாகவும் கட்டமைத் திருக்கின்றன. ஒருவருடன் இணங்கி வாழ்தல், சமூகத்துடன் இணங்கி வாழ்தல், விட்டுக் கொடுத்தல், அடைக்கலம் கொடுத்தல், புரிந்துணர்வு என்பனவே நல்லிணக்கம் எனப்படும். இத்தகைய நல்லிணக்க சிந்தனைகளின் வழி சங்ககால வாழ்வியலும் அக்கால சமூகம் உடல், உள, ஆன்மீக ரீதியாக ஒருமைப்பட்டு அல்லது ஒன்றுபட்டு இணங்கி வாழ்ந்த செய்திகள் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்றமையைக் காண முடிகின்றது. அந்தவகையில் தனிமனிதன் ஒவ்வொருவரும் தங்களுக்குள் இணங்கி இணக்கத்துடன் இருப்பதாலே குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் இணக்கத்தினை ஏற்படுத்த முடியும் என்கின்ற சிந்தனையை அது

உள்ளார்ந்தமாய் வழங்குகின்றது அது குறித்த கருத்துக்களை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**சமூக நல்லிணக்கம் – விளக்கம்**

சமூக நல்லிணக்கம் என்பது ஒரு சமூகத்தில் தனிநபரிடையே குழுக்களிடையே காணப்படும் ஒரு புரிந்துணர்வு. ஒரு விட்டுக்கொடுக்கும் தன்மை குழுக்களிடையே காணப்படும் ஒற்றுமை அதன்வழி பெறப்படுகின்ற இணக்கம் நல்லிணக்கம் எனப்படும். இத்தகைய சிந்தனைகள் சங்ககால இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவை பற்றி எடுத்து நோக்குகின்ற வேளையில் சங்ககாலத்திலே சாதிக் கட்டுப்பாடு இருக்கவில்லை. அனைவரும் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்களிடையே ஒரு புரிந்துணர்வு ஒருவரோடு ஒருவர் இணங்கிப் போகின்ற தன்மை காணப்பட்டது. அதன்வழி பெறப்பட்ட இணக்கம் சமூகநல்லிணக்கம் எனக் கூறலாம். எனவே இந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற கூறுகளாக சமாதானம், சமத்துவம், மனிதநேயம், அன்பு, நல்லறிவூட்டல், ஆற்றுப்படுத்தல், நீதி, பொதுநலம், விருந்தோம்பல், மறுபிறப்பு, ஒழுக்கம், கொடை, சமயம் முதலியன காணப்படுகின்றன. இவை சமூக நல்லிணக்கத்தினை ஏற்படுத்து வதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

**சங்ககால வாழ்வியலும் நல்லிணக்கமும்**
**சமாதானமும் நல்லிணக்கமும்**

முரண்பாடுகளைக் களையும் போது பெறப்படுவது சமாதனம் ஆகும். அதன் வழி நல்லிணக்கம் ஏற்படுகிறது. சிற்றறிவுடைய உயிர்கள் தமது அறியாமையினால் எண்ணற்ற தவறுகளைச் செய்கின்றன. ஒருவர் செய்யும் தவறான அல்லது பிழையான செயலை பிறர் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஒருவரின் பிழையினை இன்னொருவர் மிகையாக எடுத்துக் கொள்வதன் மூலம் அவர்களிடையே பகை என்னும் முளை உருவாகக் கூடும். இதனைத் தவிர்த்துவிடும் பட்சத்தில் நல்லிணக்கம் உருவாகும். இத்தகைய சிந்தனைகள் சங்க கால வாழ்வியலிலே புலப்படுகின்றன. அரசர்க்கு தம் குடும்ப உறவினும் வாழ்வினும் தாழ்வினும் நல்லறிவூட்டியவர்களாகவும் சமாதானத்தின் வழி நல்லிணக்கம் செய்து வைத்தவர்களாகவும் அக்கால புலவர்கள் விளங்கினர். அரசர்கள் தமக்குள் முரண்பட்டுக் கொண்டவர்களை இக்கால புலவர்கள் தடுக்க முயன்றமையும் அதனூடாக அவர்களைச் சாமாதானப்படுத்தி நல்லிணக்கம் செய்து வைத்தமையும் புறத் திணை நூல்கள் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது. அந்தவகையில் நெடுங்கிள்ளியை முற்றுகையிட்ட நலங்கிள்ளிக்குச் சமாதானத்தின் சிறப்பினை அறிவுறுத்துவதாக புறநானூறு குறிப்பிடுவதாவது,

> **"உன்னுடைய பகைவன் பனைமலை சூடிய சேரனுமல்லன், வேம்பினது தாரையை உடைய பாண்டியனுமல்லன், உன்னைப் போல் ஆத்தியால் கட்டப்பட்ட கண்ணியையுடைய சோழனே இவ்வுன் நாட்டுக்கழகம் சோழ மரபிற்கே தீமை விளைவிக்க வல்லது"**
>
> **(புறநானூறு, பா.எண்.45)**

என்று கோவூர்க்கிழார் பாடுகின்றார். எனவே அதனூடாக சங்ககால மன்னர்கள் புலவர்களினதும் அறிஞர்களினதும் அறிவுரைகளைக் கேட்டே ஆட்சி புரிந்தனர். இது அரசருக்கும் புலவருக்கும் இடையிலான நல்லிணக்கத் தொடர்பைச் சுட்டுகின்றது.

நாட்டு நலன் கருதி பகையரசனிடமும் மற்றும் சிற்றரசர், மனைவி, மக்கள், சகோதரர்கள் போன்றோரிடையேயும் போர்களும் போட்டிகளும் மூலமாக உட்பூசல்கள் ஏற்பட சமாதானம் வேண்டி நல்லிணக்கம் செய்து வைத்தனர். குறிப்பாக பேகன் எனும் அரசனின் வாழ்வில் மனைவி பிரிந்து சிக்கலேற்பட அடிசில்கிழார், கபிலர், பரணர், நெடுங்குன்றூர்க்கிழார் போன்றோர்கள்

சமாதானம் வேண்டி பாடியமையையும் குறிப்பிடலாம். மற்றும் குமணன் தன் நாடு இழந்து காட்டில் வாழ்ந்த போது பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர் குமணனையும் அவனது தம்பியையும் நல்லிணக்கப்படுத்தி வைத்தமையை உதாரணமாகக் கொள்ளலாம். நற்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் போர் மூண்ட போது கோவூர்க்கிழார் தடுத்து நிறுத்தியமையும் கோப்பெருஞ்சோழனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே உட்பூசல் ஏற்பட்டு போராக மாறாமல் இருக்க புல்லாற்றூர் எய்ற்றியனார் தடுத்தமையையும் குறிப்பிடலாம். இத்தகைய செயற்பாடுகளானவை அக்காலத்தில் காணப்பட்ட நல்லிணக்க வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்றன.

**சமத்துவமும் நல்லிணக்கமும்**

எவரையும் உயர்வாகவோ அல்லது தாழ்வாகவோ நடத்தாது ஒரே நிலையில் வைத்துப் பார்த்தல் சமத்துவம் எனப்படும். சங்ககால அரசர்கள் தம் மக்களை மற்றவர்கள் அடிமையாக்காத அளவிற்கு பாதுகாத்து வந்தனர். அதேபோல் மக்களும் அரசர்களுக்கு எதிராக எந்த கலகங்களையும் செய்யாது இருந்தனர். அரசன் "தான்" என்ற அகங்காரமும் மக்கள் வேறு என்ற இழி எண்ணமும் அற்றவனாக இருந்தான். இதனை குறுங்கோழியூர்கிழார்,

> **"உலகத்தின் கண்ணே நிலைபெற்று வாழ்கின்ற உயிர்கள் எல்லாம் தாம் தாம் அரசனிடத்து வைத்த காதலால் அவனுக்கு ஏதேனும் துன்பம் வருமோ என்று அஞ்சுகின்றனர்"**

எனக் கூறினார். இதன் மூலம் அரசனுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள நல்லிணக்கம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

மனித வாழ்க்கை என்பது நிலையில்லாதது. அது ஒரு நீர்க்குமிழி போன்றது. அதற்குள் போராட்டங்களும் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் கொண்டு மனிதர் உலகில் வாழுகின்றனர். எனவே வாழ்வின் நிலைத்த தன்மைக்கு அடிப்படையாக அமைவது பிறருக்கு நாம் நன்மை செய்வது ஒன்றே ஆகும்.

> **"நெருநல் உளனொருவன் இன்றில்லை**
> **என்னும் பெருமை உடைத்துஇவ் வுலகு"**
> **(திருக்குறள், குறள் எண்-336)**

என திருக்குறள் பதிவு செய்கிறது. எனவே இன்பமும் துன்பமும் பிறரால் வருவன அல்ல. அவர்கள் செய்கின்ற செயல்களின் மூலம் தான் அவர்களுக்கு வருகின்றன. நல்லது செய்வாராயின் அவர்களுக்கு நன்மை நடக்கும் என்றும் தீமைகள் செய்தால் அவர்களுக்கு தீமைகளே விளைவிக்கும் என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனால் தான் "வினை விதைப்பவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்" என்ற பழமொழி தோன்றியிருக்கிறது போலும். இதனையே கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில்

> **"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
> **தீதும் நன்றும் பிறர்தர வாரா**
> **நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
> **சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
> **இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்**
> **இன்னா தென்றலும் இலமே. மின்னொடு**
> **வானம் தண்துளி தலைஇ ஆனாது**
> **கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று**
> **நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**
> **முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
> **காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
> **பெரியோரை வியத்தலும் இலமே.**
> **சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"**
> **(புறநானூறு, பா.எண்.192)**

என்று விளக்குகிறார். எனவே அவரவர் செய்கின்ற வினையின் காரணமாகவே அவர்களுக்கு விளைவுகள் ஏற்படுகின்றன என்பது பெறப்படுகின்றது. ஆகவே ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவரும் சமம் என வாழ்வதன் ஊடாகவும்சு எமக்கு ஏற்படும் துன்பத்திற்கும் இன்பத்திற்கும் நாமே காரணமாக அமைகிறோம் எனக்

கருதி குறித்த மக்கள் நல்லிணக்கத்தோடு வாழ்ந்திருந்தமையை அறிந்துகொள்ள முடிகிறது.

**மனிதநேயமும் நல்லிணக்கமும்**

பிற உயிர்களிடத்துக் கொள்ளும் இரக்கம், அன்பு, அதன்வழி துன்பத்தில் பங்கேற்றல் முதலிய மனித நேய உத்தியின் வழி சங்ககால வாழ்வியல் நல்லிணக்க சிந்தனையைத் தம்மகத்தே கட்டமைத்திருக்கின்றது. சங்ககாலத்து மக்கள் ஒருவருக்கு துன்பம் ஏற்படின் அதனை நினைத்து தாம் வருந்தினர். ஒருவர் இறந்து விட்டால் அங்குள்ளவர்கள் பசியுடன் இருந்தனர். இதனை ஒல்லையூர்கிழான் சாத்தான் என்பவன் இறந்த போது குடவாயிற்கீரத்தனார் எனும் புலவர் ஒரு முல்லைக் கொடியை நோக்கி,

***"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்***
***நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கி***
***பாணன் சூடான் பாடினி அணியாள்***
***ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த***
***வல்வேற் சாத்தன்மாய்ந்த பின்றை***
***முல்லையும் பூத்தியோ வொல்லையூர்***
***நாட்டே.." (புறநானூறு, பா.எண்.242)***

எனக் கூறுகின்றார். அதாவது "சாத்தன் இறந்ததால் முல்லையே உன்னை யாரும் சூட மாட்டார்கள். அப்படிப்பட்ட ஊரில் ஏன் பூத்துள்ளாய்" என்று கேட்கின்றார். அத்தோடு இறந்தவர் மறு வாழ்வினும் நன்மை பயக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

***"இம்மை போல காட்டி யும்மை***
***இடையில் காட்சி நின்றோ***
***உடன் உறைவு ஆக்குகஉயர்ந்த பாலே"***
***(புறநானூறு, பா.எண்.236)***

இவ்வளவு சிறந்த அன்பு, இரக்கம், ஒருமைப்பாடுசங்ககாலத்தில்வளர்ந்தோங்கி எங்கும் அன்பொலியை பரப்பி அதன்வழி மனிதநேயமும் நல்லிணக்கத்தை ஏற்படுத் தியிருந்தமை அக்கால இலக்கியங்களின் ஊடாக அறியமுடிகிறது.

பேரன்பும் கழிவிரக்கமும் அருளுடைமையும் மண்ணில் தோன்றிய அனைத்து உயிர்களிடத்தும் மனிதநேயம் கொள்ள முனையும் மனிதன், பிறமனிதனிடத்தில் அன்பு பாராட்டுவது இயல்பு. மனிதன் அல்லாத பிற உயிர்களிடத்தில் கருணை கொள்வது அவரவர் விருப்பு. அஃறிணையை உயர்திணையாக்கி தனக்கு ஒப்பாக வைத்து கருதுவது மனிதநேயத்தின் சிறப்பு. நற்றிணைப் பாடல் ஒன்றில் அஃறிணையாகிய புன்னை மரத்தை சகோதரியாக பாவனை பண்ணுகின்ற மனிதநேய உயர்வு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இச்செய்தியை,

***"விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி***
***மறந்தனம் துறந்த காழ்முளை அகைய***
***நெய்பெய் தீம்பால் பெய்தனம் வளர்ப்ப***
***நும்மிற் சிறந்தது நுவ்வை யாகுமென்***
***றன்னை கூறினாள் புன்னையது சிறப்பே***
***அம்ம நாணுதும் நும்மொடு நகையே"***
***(நற்றிணை.பா.172)***

என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. தலைவி சிறுமியாக இருக்கும் பொழுது தோழியர்களோடு புன்னைக் காயை வைத்து விளையாடி அதனை மறந்து மண்ணில் அழுத்தி விடுகிறாள். நாளடைவில் அப்புன்னைக் காய் முளைத்தெள அதற்கு நெய், பால் முதலியவற்றை ஊற்றி வளர்க்க நன்றாக வளர்ந்தது. அதனைக் கண்ட அவளது அன்னை புன்னை மரம் உனக்கு சகோதரி முறை என்றுகுறிப்பிட்டாள். தலைவியின் களவு வாழ்க்கையில் தலைவன் குறியிடம் வேண்டி புண்னைமரத்தின் கீழ் நின்றபோது இப்புன்னை மரம் வெறும் மரம் அல்ல எனக்கு சகோதரி முறையாவாள். எனவே என் சகோதரியின் முன்பு உன்னோடு உரையாடுவதற்கு நாணமடைவதாக குறிப்பிடுகின்றாள்.

இப்பாடலில் புன்னை மரத்தை தன் மகளாக ஏற்றுக்கொண்ட தாயின் மனிதநேயம் வெளிப்படுகின்றது. தன் அன்னையானவள் புன்னை மரத்தை சகோதரி முறையென்று கூறியதாக தலைவியும் புன்னமரத்தை

சகோதரியாக ஏற்றுக்கொண்டு நாணமடைந்தது அவளின் மனிதநேயத்தின் உச்சமாக விளங்குகின்றது. இதன்வழி அவர்களிற்கிடையிலான நல்லிணக்கத்தின் தன்மை புலப்படுகிறது.

அன்பின் முதிர்ச்சி நற்பண்பின் அடையாளமாக வெளிப்படும். நற்பண்பு மனிதநேயத்தின் பிறப்பிடமாகும். இத்தகைய நற்பண்பும் மனிதநேயமும் கொண்ட தலைவனை நற்றிணை படம் பிடித்துக் காட்டுகிறது. தலைவனின் மனிதநேயப் பண்பினை,

**“வினையமை பாவையின் இயலி நுத்தை**
**மனைவரை இறந்து வந்தனை ஆயின்**
**கடுஞ்செம் மூதாய் கண்டும் கொண்டும்**
**நீ விளையாடுக.**
**மணலிடுமருங்கின் இரும்புறம் பொருந்தி**
**அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்**
**நுமர்வரின் மறைகுவென் மாஅயோளே.**
**(நற்றிணை.பா.362)**

என்னும் பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன. தலைவனுடன் உடன்போகும் தலைவி இதற்கு முன்பு தன் மனைவியை நீ ங்கி வேறு இடம் புகாதவன். “அவளின் மென்மையான பாதங்கள் கடுமையான பாதைகளை அறியாதவை. தலைவியின் அச்சத்தை உணர்ந்து கொண்ட தலைவன் தாம் செல்லவிருக்கின்ற பாதை குறித்து விளக்குகின்றான்.நாம் செல்லும் பாதைகள் அரிய வெஞ்சுரம் அல்ல. மாறாக பசுமை நிறைந்த வண்டல் மண் மேட்டினை உடையது. அங்கு நிறைந்திருக்கின்ற தம்பலப்பூச்சிகள் நீ மகிழ்ந்து விளையாடுவதற்கு ஏதுவாக இருக்கும். நீ விளையாடுகின்ற நேரத்தில் அருகிலுள்ள வேங்கைமரத்தின் பின்புறம் மறைந்து கொள்வேன். நம்மைப் பின்தொடர்ந்து பகைவர் வந்தால் எதிர்த்து போரிடுவேன் உன்னுடைய சுற்றத்தினர் வந்தால் அங்கேயே மறைந்து கொள்வேன்” என்று குறிப்பிடுகின்றான்.

இப்பாடலில் தலைவனின் மனிதநேயம் இரண்டு பாடல்களில் வெளிப்பட்டு நிற்கிறது. ஒன்று தலைவன் வினவுவதற்கு முன்பதாகவே வழியில் ஏதமின்மை பற்றி அவளின் அச்சத்தை போக்கியது. இரண்டு பகைவரை எதிர்த்து போரிடுகின்ற ஆண்மையுடையவனாய் இருந்தபோதிலும் தலைவியின் தமர் முன்பு மறைந்தொழுகும் தன்மையுடையவனாய் திகழுதல். தலைவியை பிரிந்த துயரில் சுற்றத்தினர் கோபத்தில் இருப்பர். சிலசுடுசொற்களைசெ ால்ல நேரிடும்.தன்மீதும் குற்றம் இருக்கிறது எனவே தான் தமர் முன்பு மறைந்தொழுக எண்ணுகின்றான்.பிறரிடத்துக் கொண்ட கருணை அவனுடைய மனிதநேயப் பண்பிற்கு சான்றாக அமைகின்றது. அதனை,

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பு எனும் நாடாச் சிறப்பு.**
**(திருக்குறள், குறள் எண்-74)**

என்று திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறுகின்றார். அன்பு நிறையப்பெற்ற மனித உள்ளம் மனிதநேயம் மிகுந்த நற்பண்பாக வெளிப்படுவதை அறியமுடிகின்றது. அதன் வழி சுற்றத்தாருடனும் தன் தலைவியுடனும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு ஏற்ற வகையில் அக்கால தலைவர்கள் நடந்து கொண்டமையை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

## அன்பும் நல்லிணக்கமும்

சங்ககால வாழ்வியலானது நல்லிணக்கப் பண்புகளான அன்பு, கொடை, புரிந்துணர்வு, தானம், இரக்கம், தியாகம், முதலிய சிந்தனைகளைக் கொண்டிருப்பதனை அதனது அடிப்படை நூல்களிலே காணமுடிகிறன. அந்தவகையில் புலவர்களின் ஆலோசனைப் படியே நாடு நிர்வகிக்கப்பட்டதுடன் போர்க்களத்தில் கூட புலவர்களை நினைத்துப் புலம்பும் அளவிற்கு புலவர்களிடத்து அன்பு கொண்டு இருந்தனர். குறிப்பாக அன்பின் நெருக்கத்தால் தனக்கு கிடைத்த அரும் நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்தும் அவன் இறந்தபோது (புறம்: 8-11) ஔவை நெஞ்சுருகிப் பாடியமையும்

பாரிமன்னன் இறந்த போது உயிர் வாழ விரும்பாத கபிலர் வடக்கிருந்து (உணவு, நீர் இல்லாது வடக்கு நோக்கி இருந்து இறத்தல்) உயிர் நீத்தமையும் தாக்க சான்றாகும். இதனூடாக அவர்களிடையே காணப்பட்ட நல்லிணக்கம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

இக்காலப்புலவர்களும் மக்களும் அரசனிடம் பேரன்பு உடையோராய் வாழ்ந்தனர். சிந்தனையாற்றல் மனிதாபிமானம், ஆட்சிக்குதவல், அறிவுரை கூறல் என்பவைகளில் சிறந்து விளங்கிய இவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடிப் பொன்னும் பொருளும் பெற்றனர். இதன் மூலாகப் புலவர்களுக்கும் மன்னர்களுக்குமிடையே அன்பும் அதன்வழி சிறந்த நல்லிணக்கமும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலகம் நிலைபெற்று நீடுவாழ்வதற்கு அன்பு தலையாய ஒன்று. பிற உயிர்களிடத்து அன்பு செலுத்தி அரவணைத்து வாழுகின்ற வாழ்க்கையில் அனைத்து உயிர்களும் இன்பம் அடைவதோடு அவற்றினுள்ளே நல்லிணக்கம் ஏற்படுகின்றது. நற்றிணையில் தலைவி தன் சுற்றத்தாரிடத்தும் ஆயத்தாரிடத்தும் கொள்கின்ற அன்பின் மிகுதி அவளுக்கு அவர்களிடம் இருக்கின்ற நல்லிணக்கத்தைப் வெளிப்படுத்துகிறது. உடன்போக்கிற்காக துணிந்த தலைவி பிறர் அறிந்திடாதவாறு தம் கால்களிடத்து அணிந்திருந்த சிலம்பினை கழற்றி விளையாட்டு பொருட்கள் நிறைந்த கூடையில் வைப்பதற்கு செல்கிறாள். அப்பொழுது அவளையும் அறியாமல் அவள் கண்கள் நீரை சொரிந்ததாகக் கூறப்படுகிறது. விடியும் பொழுது தான் இல்லை என்பதை (உடன்போகிவிட்டால்) வரிகள் மேலிட்ட பந்தும் சிலம்பும் உணர்த்தும். அதனை காணும் போதெல்லாம் தன் சுற்றத்தினரும் ஆயத்தினரும் துன்பமுற்று வருந்துவர் என்று உடன்போவதை தவிர்த்தாள். இச்செய்தியை,

**"அரியவை சிலம்பு கழீஇப் பன்மாண்**
**வரிப்புணை பந்தொடு வைஇய செல்வோள்**
**இவைகாண் டோறும் நோவர் மாதோ**
**அளியரோ அளியர்என் ஆயத்தோர்"**

**(நற்றிணை.பா.12)**

என்னும் பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன.

உள்ளத்தின் உணர்வுப் பெருக்காக திகழும் அன்பை கட்டுப்படுத்துவதற்கும் மறைப்பதற்கும் இயலாது என்பதை வள்ளுவரும்

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்**
**ஆர்வலர் புன்கண்ணீர் புசல் தரும்**

**(திருக்குறள், குறள் எண்-71)**

என்னும் குறட்பாவின் வழி அன்பின் மிகுதியைக் குறிப்பிடுகிறார். தலைவி உடன்போகாமைக்கு காரணம் அவள் சுற்றத்தினர் மீதும் ஆயத்தினர் மீதும் கொண்டிருந்த அன்பு போற்றுகின்ற மனிதநேயப் பண்போடு அவர்களுக்கடையிலான அதீத இணக்கத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

## நல்லறிவுட்டலும் நல்லிணக்கமும்

ஒருவருக்கு நல்ல அறிவுரை கூறுவதனாலும் அவர்களுக்கும் எமக்கும் நல்லிணக்கம் ஏற்படும். இத்தகைய சிந்தனைகளை சங்ககால சமூக வாழ்வியல் ஊடாக அறிய முடிகிறது. புறத்திணை இலக்கிய செய்யுட்களில் பெரும்பாலானவை பாடாண்திணை மரபில் உள்ளவையாகும். இம்மரபில் அக்கால புலவர்கள் அரசர்களுக்கு நல்லறிவுட்டி நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையிலான கருத்துக்களைக் கூறியுள்ளனர். உலகத்தின் இயல்புகளையும் நிலைகளையும் எடுத்துக் கூறுவதன் மூலம் உலக நியதிகளை அரசர்க்கு புகட்டினர். குறிப்பாக குறித்த நாட்டில் இயற்கை செயற்கை மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்கள் அரசனையே பழிதூற்றுவரென புறநானூறு "நளியிரு முந்நீரேணியாக.." எனும் பாடலில்,

**"மாரிபொய்ப்பினும் வாரிகுன்றினும் இயற்கை**
**அல்லன செயற்கையில் தோன்றினும்**
**காவலர் பழிக்கும் இக்கண் அகன் ஞாலம்."**

**(புறநானூறு, பா.எண்.35)**

என வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ளார். இதனூடாக புலவர்கள் மன்னர்களுக்கு

எவ்விதமான பழிச் சொற்களும் வந்து விடக்கூடாது என்ற வகையில் முன்கூட்டியே நல்லறிவுட்டும் வகையில் ஆலோசனைகளையும் வழங்கினர்.

குலமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை, வெள்ளைக்குடி நாகனார் பாடி நல்லறிவுட்டியமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கோள் சொல்பவர்களின் வீணான சொற்களைக் கேளாமல் உழவர்களையும் குடிமக்களையும் காப்பாயாக என,

**“நொதுமலாளர் பொய்மொழி கொள்ளாது**
**பகடு புறம்தருநர் பாரம் ஓம்பிக்**
**குடிபுறம் தருகுவை.”**

**(புறநானூறு, பா.35, வரி.31-33)**

எனும் பாடல் வரிகள் மூலம் கூறினார். இத்தகைய செயற்பாடுகளினூடாக புலவர்க்கும் மன்னனுக்கும் இடையிலான நல்லறிவூட்டுதல் மூலமான நல்லிணக்கத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றது.

## ஆற்றுப்படுத்தலும் நல்லிணக்கமும்

ஆற்றுப்படுத்தல் என்பது “வழிப்படுத்தல்” என்பதாகும். சங்ககாலத்திலே ஆற்றுப்படுத்தல் மரபு காணப்பட்டது. அதாவது கொடை பெற்ற ஒருவர் கொடை பெறாத ஒருவரை கொடையாளியிடம் செல்லுமாறு அவரை வாழ்த்திக் கூறி வழிப்படுத்தல் ஆற்றுப்படுத்தல் ஆகும். சங்க இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை என்பன முதன்மையான ஆற்றுப்படை நூல்களாக உள்ளன.

கூத்தர், பாணர், பொருணர் முதலானோர் ஒரு வள்ளலிடம் சென்று பெரும் செல்வத்தைப் பெற்று மீண்டும் வரும் வழியில் வறுமைப் பிணியில் வாடும் ஒருவரைக் காணில் தான் பெற்ற செல்வம் யாரிடமிருந்து கிட்டியது என்றும் அவரிடமே சென்று பொருளைப் பெறுமாறும் கூறி தான் சென்ற வழியையும் கூறி அந்த வழியில் போகச் செய்தலுமாகும். இதனை,

**“அளிதோ தானே பாரியது பறம்பே**
**விரையொலிகூந்தல் விறலியர் பின்வர,**
**ஆடினீர்பாடினீர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்குஈயும்மே..”**

**(புறநானூறு, பா.109)**

**“பாணன் சூடிய பசும்பொன் தாமரை**
**கடாயானைக் கலிமான்பேகன்**
**எத்துணையாயினும் ஈதல்**
**நன்று என” (புறநானூறு, பா.141)**

முதலிய சங்ககால பாடல்கள் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இத்தகைய ஆற்றுப்படுத்தல் பண்பு சார்ந்த இலக்கியமானது பொருள் வேண்டுவதன்றி இறைவனிடம் அருள் வேண்டுவதாயும் தோன்றின. இறைவனின் அருளை அடைய விரும்பும் அடியவரை ஆற்றுப்படுத்து வதாக நக்கீரரால் திருமுருகாற்றுப்படை பாடப்பட்டது. அந்தவகையில் மக்களிடம் மாத்திரமன்றி இறைவனிடமும் அக்கால மக்கள் நல்ல இணக்கமாக வாழ்ந்திருந்தமை எடுத்துக்காட்டப்படுகின்றது.

## நீதியும் நல்லிணக்கமும்

சங்க இலக்கிய நூல்கள் நீதி கூறுவதன் ஊடாக நல்லிணக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமையினை அறிய முடிகிறது. விருப்பு வெறுப்பு எதுவுமின்றி நீதியின் முன் அனைவரும் சமம் என்ற நிலை அக்காலத்தில் மக்களிடையே நிலவியிருந்தது. பாண்டிய நாட்டின் அறங்கூறு அவையம் நீதியின் காலமாக காட்சியளிக்கிறது. சான்றாக மாங்குடி மருதனார் நீதி நிறைந்த ஆட்சியில் நாடு சிறப்புற்று விளங்கியதாக மதுரைக்காஞ்சியில்,

**“அச்சமும் அவலமும் ஆர்வமும்நீக்கிச்**
**செற்றமும் உவகையும் செய்யாது காத்து**
**ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி**
**சிறந்த கொள்கை அறம் கூறு அவையம்”**

**(மதுரைக்காஞ்சி -பா.வரி. 489-492)**

என்ற வரிகளின் மூலமாக அறிய முடிகிறது. மற்றும் நீதியின்படி மக்கள் தன்னுடைய

வாழ்க்கையை வாழும் போது குற்றம் குறைந்து சிறப்பான முறையில் தன்னுடைய வாழ்க்கையை வாழ உயர்ந்த நீதிகள் உதவியாக அமைகின்றன. அதன் மூலமாக மக்களிடையே நல்ல இணக்கம் ஏற்பட்டிருந்தமையை அறிய முடிகிறது.

### பொதுநலமும் நல்லிணக்கமும்

சமூகத்தில் வாழும் ஒருவருக்கு சுயநலம் இருந்தால் நல்லிணக்கம் ஏற்படாது. மாறாக பொதுநலம் இருந்தால் தனிமனிதனிடையேயும் குறித்த சமூகத்திலும் நல்லிணக்கம் காணப்படும். இது குறித்த செய்தியானது சங்ககால சமூக வாழ்வியல் ஊடாக அறிய முடிகிறது. அந்தவகையில் உலகம் இன்று வரை நிலைத்து உள்ளதற்கு காரணம் மக்கள் எதனையும் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழுகின்ற நல்ல உள்ளம் கொண்டு இருப்பதே காரணம் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதனைப் புறநானூறு,

> **"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
> **அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்**
> **தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
> **துஞ்சலும் இலர். பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
> **புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்**
> **உலகுடன் பெறினும் கொள்ளலர். அயர்விலர்**
> **அன்ன மாட்சி அனையராகித்**
> **தமக்கென முயலா நோன்தாள்**
> **பிறர்க்கென முயலுநர் உண்மையானே"**
> **(புறநானூறு, பா.182)**

என்று பதிவு செய்கின்றது. எனவே இந்த உலகம் நிலைபெற்று இருப்பதற்குதனக்கென சுயநலமாக வாழுகின்ற மனிதர்கள் இல்லாமல் பிறர்க்காக முயன்று உதவுகின்றவர்கள் வாழுகின்ற காரணத்தினாலேயே ஆகும் என்பது பெற முடிகின்றது.

உலகில் வாழும் வாழ்க்கை சிறப்பானதாக அமையவும் இருவகை வாழ்க்கைக்கும் மாமருந்தாக அமையும் வழிகளைக் காட்டும் விதமாக இலக்கியங்களில் நீதிநெறிக் கருத்துக்கள் அமைந்துள்ளது. வாழும் வரை அல்ல. வாழ்க்கை வாழ்ந்த பின்பும் மனிதன் பேசப்பட வேண்டும். எனவே நீதிவழுவாமல் வாழ்வோமேயானால் வாழ்க்கை சிறப்படையும் சீர்பெறும்அத்தகையவாழ்வியல்நெறிநின்று நீதி வழுவாமல் வாழ்ந்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாழ்க்கையில் மட்டுமன்றி அகவாழ்விலும் பழந்தமிழர் உயர்ந்த நீதியை பின்பற்றினார்கள் என்பதுசங்கஇலக்கியச்சான்றுகள்கொண்டு அறியமுடிகின்றது. குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவி தன் தலைவன் கூறிச் சென்ற நீதியில் தவறமாட்டான் என்று கூறியிருப்பது இங்கு சான்றாக,

> **"வண்டுபடத் ததைந்த கொடி இணர் இடையிடுபு**
> **பொன் செய் புனை இழை கட்டிய மகளிர்**
> **கதுப்பின் தோன்றும் புதுப் பூங்கொன்றைக்**
> **கானம் கார் எனக் கூறினும்**
> **யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே"**
> **(இராகவையங்கார், ரா., (1947), பாடல் எண்.21)**

என்று பதிவு செய்கிறது. தோழி பருவம் வந்தும் தலைவன் வரவில்லை என்று நினைக்கும் போது தலைவி தலைவன் கூறிச் சென்ற காலம் வந்துவிட்டதாக இயற்கை குறிப்பிட்டாலும் என் தலைவன் சொல்லிச் சென்றதன்னுடைய நீதியிலிருந்து வழுவமாட்டான் என்று தலைவி கூறியிருக்கின்ற செய்தியானது அக்கால மக்களினுடைய உயர்ந்த நீதி உடைய வாழ்க்கையை எடுத்துக்காட்டுகின்றது. எனவே பண்டைய தமிழர்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் உயர்ந்த நீதி உடையவர்களாக விளங்கி அதன் வழி அவர்களிடையே சிறந்த நல்லிணக்கம் காணப்பட்டமையும் புலனாகின்றது.

### விருந்தோம்பலும் நல்லிணக்கமும்

தமிழர்களின் தலையாய பண்பு விருந்தோம்பலாகும். விருந்து புறத்திருக்க சாவாமருந்தே கிடைத்தாலும் தனியாக உண்ணாத தகைமைக்குரியோர் தமிழர்கள் என சங்கப்பாடல்கள் சுட்டும். இதனையே,

**"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரா
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே"**

**(புறநானூறு, பா.182)**

எனப் புறநானூறு போற்றுவதை காண்கிறோம். சிறுகுடிக்கிழான் பண்ணனைப் பாராட்டி சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடிய புறப்பாடலில்,

**"பொய்யார் எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்."**

**(புறநானூறு, பா.173)**

காட்சியை காட்டுகிறார். அப்பசிப்பிணி மருத்துவனாம் பண்ணனை "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய"எனப் பாவலர் பாடுகிறார். "விருந்தினரைப் பேணாத வாழ்க்கை செம்மை இல்லாத வாழ்க்கை விருந்துண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை" எனப்பாடுகிறார் பெருங்குன்றூர்க்கிழார்.

சங்ககாலப் பெண்டிர் விருந்தினர்க்கு உணவளித்து மகிழ்ந்து வாழும் பயனுறு வாழ்வை ஊன்பொதி பசுங்குடையார் எனும் புலவர் சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை பாடும் புறப்பாட்டில் வியந்து போற்றுகிறார்.

எந்த நாட்டவராயினும் எந்த ஊரவராயினும் தன் வாயில் தேடி வந்தவரை இனிதே வரவேற்று மகிழுகின்ற நல்லுள்ளம் கொண்டவர்கள் தமிழ்மக்கள்.தம்முடைய சுற்றமாயினும் அயலவராயினும் முகம் கூசாமல் விருந்தோம்பும் பண்பிற்கு அடிப்படையாக அமைவது நல்லிணக்கப் பண்பாகும்.

சங்ககாலப் பெண்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்று ஓம்பும் பண்பினை அக்கால இலக்கியங்கள் ஊடாக அறிய முடிகிறது. தலைவன் பரத்தைமை ஒழுக்கம் புரிந்ததற்காக தோழி தலைவனுக்காக தலைவியிடம் வாயில் வேண்டுகிறாள் தலைவி. தோழியின் கருத்துக்கு முரண்பட்டு தலைவனுடன் ஊடப்போவதாக குறிப்பிடுகின்றாள். தலைவன் தன்னை தனிமையில் தவிக்கவிட்டு பரத்தையிடம் சென்றமைக்காக அவள் வருந்தவில்லை. மாறாக தன்னை விட்டு தலைவன் பிரிந்ததனால் இல்லற மகளிர்க்குரிய விருந்தோம்பல் பேற்றினையும் சுற்றம் காக்கின்ற முறைமையையும் தன்னால் மேற்கொள்ள முயலாததை எண்ணி ஊடுவதாக குறிப்பிடுகின்றாள். இங்கு தலைவியின் விருந்தோம்பும் பண்பும் அவளது வீட்டிற்கு வரும் விருந்தினர்களுடன் அவளுக்கிருக்கின்ற நல்லிணக்கத்தினையும் வெளிக்காட்டுகின்றது.

நற்றிணையில் மற்றொரு பாடல் தலைவி விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று மகிழ்ந்து உபசரிப்பதாகக் குறிப்பிடுகின்றது. அதனை

**"சில்காழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டமர்த்த கண்ணள் தகைப்பெற
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகிற் றலையின் துடையினள் நப்புலத்
தட்டியோளே..
வருகதில் லம்ம விருந்தே சிவப்பான்று
சிறுமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே".**

**(நற்றிணை,பா.120)**

என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. தலைவி அடுக்களையில் சமைப்பதானால் எழுந்த புகை அவளுடைய கண்களில் நீரை வார்த்தது. பிறையாகிய நெற்றியில் வியர்வை அவரும்பியது. வெம்மையால் முகம் சிவந்தது. அதனை பொருட்படுத்தாக தலைவி முந்தானையின் தலைப்பில் தன் முகத்தைதுடைத்துக்கொண்டுவிருந்தினரை வரவேற்று மகிழ்கிறாள். தலைவி அரிவையாக இருந்த போதும் பணிச்சுமையை பெரிதாக எண்ணாமல் வருவோரை புன்னகைத்து வரவேற்பது அவளுக்கும் விருந்தினர்களிற்குமிடையிலான நல்லிணக்கத்தினை வெளிப்படுத்துகிறது. விருந்தோம்பலின் சிறப்பு கருதியே

பிற்கால இலக்கியங்களிலும் முக்கியத்துவம் வழங்கப்படிருப்பதனைக் காண முடிகிறது. குறிப்பாக வள்ளுவர் அதற்கென்று தனியொரு அதிகாரம் அமைத்திருக்கிறார். உதாரணமாக விருந்து உபசரிப்பின்போது முகமலர்ந்து வரவேற்க வேண்டும் என்பதை,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகம்**
**திரிந்து நோக்கக் குழையும் விருந்து**
**(திருக்குறள்,குறள் எண்-90)**

என்று திருவள்ளுவர் சிறப்பாக எடுத்து ரைக்கின்றார். தமிழரின் வாழ்வியல் களஞ்சியமாக போற்றப்படுகின்ற தொல்காப்பியம் இல்லற மகளிர்க்குரிய நல்லறங்களாக

**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்**
**(தொல்.நூர. பா.எண்.150)**

விருந்தோம்பும் பண்பினை குறிப்பிடுகின்றது. தமிழ் பண்பாட்டு காப்பியமாக திகழும் சிலப்பதிகாரமும்,

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோன் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.**
**(சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, பா.வரிகள்.71-73)**

விருந்தோம்பலின் மாண்பு பற்றி குறிப்பிடுகின்றது. உகத்திலுள்ள உயிர்களுக்கு எல்லாம் இன்றியமையாதது உணவு. அந்த உணவினை பிறருக்கு அளிப்பதில் உள்ள உயர்வினை,

**“..மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”**
**(மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, பா.வரிகள்,95-97)**

என்று மணிமேகலை குறிப்பிடுகின்றது. எனவே விருந்தோம்பல் ஊடாக சங்ககாலத்து சமூகம் நல்ல இணக்கத்துடன் வாழ்ந்திருந்தமையை அறிய முடிவதோடு அதன்வழி பிற்கால இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு சிறப்புற்று விளங்குவதற்கு சங்ககால இலக்கியங்கள் அடிப்படையாக அமைகின்றமையும் இவ்வாய்வின்வழி அவதானிக்க முடிகிறது.

**மறுபிறப்பும் நல்லிணக்கமும்**

சங்ககால வாழ்வியலானது கன்மம், கன்ம மறுபிறப்புப் பற்றிக் கூறி அதன்வழி தன்னுள்ளேயும், சமூகத்துள்ளும் இணங்கி வாழ்வதனைக் குறிப்பிடுகின்றது. அதாவது உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டு இவ்வுலகத்தைத் தவிர இன்ப, துன்பங்களை அனுபவிக்கக் கூடிய வேறு உலகங்களும் உண்டு. இத்தகைய நம்பிக்கை பழங்காலத் தமிழர்களிடம் இருந்தது. தலைவன் தமக்கு வாக்கு அளித்தபடி மணந்துகொள்ள வராததைக் கண்ட தலைவி இப்பொழுது நம்மை அவர் கொள்ளாவிட்டாலும் மறு உலகத்திலாது அவரைக் கூடி இன்பம் அடையும் வாழ்க்கை கிடைப்பதாக என்று கூறி வருந்துகிறாள். இதனைக் கபிலர் கூறுவதன் மூலம் மறுபிறப்புக் கொள்கை மூலமான இணக்கத்தினை வெளிக்காட்டுகிறார். அவர் முறைப்படி என்னை மணந்து கொள்ள வராவிட்டாலும் என்மனம் சமாதானம் அடையும்படி இறந்தபின் செல்லும் மறு உலகத்திலாவது அவரோடு இணைபிரியாதிருக்கும் நன்மை கிடைக்கட்டும் என்று கூறி தலைவி கண்கலங்கினாள். சோர்வடைந்தாள் தாங்க இயலாத துன்பத்துடன் தேங்கி அழுதாள் என்பதை,

**“ஆற்றின் வாரார் ஆயினும் ஆற்ற**
**ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கு**
**மான் அமர் நோக்கம் கலங்கிக் கையற்று**
**ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்”**
**(குறிஞ்சிப்பாட்டு,பா.வரிகள்.23-26)**

என்ற வரிகளில் கபிலர் எடுத்துக்காட்டுவது நோக்கத்தக்கது.

பழந்தமிழர்கள் கட்டுப்பாடற்ற வாழ்க்கையை வாழும் மக்களாக விளங்கினர். பின்னர் பல்வேறு நாகரிக மாற்றத்தால் கூடி வாழும் வாழ்க்கையை வாழ்வதற்குத் தொடங்கினர். அதன் பின்னர் ஒருவர் செய்யக்கூடிய தவறுகள் அல்லது குற்றங்களை தட்டிக் கேட்டு அவர்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இதன்

விளைவாக சமூகம் என்ற அமைப்பு உருவானது. சமூகத்தில் வாழும் போது நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும். இம்மை மறுமை என்ற இருவகை வாழ்க்கை உள்ளதை மக்கள் அறிந்திருந்தனர்.

தற்பொழுது தாம் வாழும் வாழ்க்கையில் அவர்கள் செய்கின்ற செயலை மறுமைக்கும் தொடர்ந்து வரும் என நம்பினார்கள். எனவே அத்தகைய வாழ்வே அனைவரும் விரும்பத்தக்கது என்று நல்வழிப்படுத்துகின்ற வழிகளையும் உணர்ந்திருந்தனர். எனவே தன் வாழ்நாளில் பிறருக்கு நல்லது செய்யாவிட்டாலும் கூட தீயதைச் செய்யாமல் வாழ வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கம் உடையவர்களாக மக்கள் வாழத் தொடங்கினர். அதுவே மனிதனை நல்ல கதிக்குக் கொண்டு சேர்க்கும் என்றும் உணர்ந்தனர். இத்தகைய சமூக வாழ்வை புறநானூறு,

**“பல் சான்றீரே பல் சான்றீரே**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயன்இல் மூப்பின் பல் சான்றீரே**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**
**பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ**
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்ஆற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே”**
**(புறநானூறு, பா.எண்.195)**

என்று பதிவு செய்துள்ளது. இப்பாடல் அடிகள் சமுதாயம் முழுவதும் நல்லிணக்கப்படுத்தும் நோககோடு அமைந்துள்ளது. மேலும் உலக உயிர்கள் உய்வடைவதற்கும், உயர்ந்த நிலையை அடைவதற்கும், பிறருக்குத் தீமை செய்யாது இருத்தலே மறுமைக்கும் நன்மையாய் அமையுமென்று கூறுகிறது. இவ்வாறு தீமை செய்யாது நன்மை செய்து வாழ்வோமானால் நற்கதி கிடைப்பதோடு நல்ல இணக்கமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ முடியும் என்ற செய்தி சங்ககால சமூக மக்களின் வாழ்வியலூடாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

**ஒழுக்கமும் நல்லிணக்கமும்**

ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். அது வேஉண்மையான சிறந்த வாழ்க்கையாகும். ஒழுக்கத்திலிருந்து வழுவி வாழும் வாழ்வு இழிவானது. அஃது ஒருவருக்கு அழியாப் பழியையும் இழிவையும் தரும். ஒழுக்கத்துடன் வாழ்ந்தால்புகழ்பெறலாம்என்றுபண்டைய கால மக்கள் நம்பினர். நம்பியதோடு மட்டுமல்லாது அவ்வண்ணமே வாழ்ந்தனர். இத்தகைய பண்பாடு சார்ந்த நம்பிக்கையானது,

**“முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை**
**நேவருங் குரைய கலகெடிற் புணரும்**
**சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்**
**மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்**
**ஆசறுகாட்சி ஐயர்க்கும் அந்நிலை**
**எளியவென்னார் தொன்மருங்கு அறிஞர்”**
**(குறிஞ்சிப்பாட்டு பா.வரிகள்.13-18)**

குறிஞ்சிப்பாட்டு அக்கால மக்களின் உன்னதவாழ்க்கையைவிளக்கும்அரியஓவியம் போன்று அமைந்துள்ளது. ஒழுக்கம் உயிர் போன்றது என்ற அரிய வாழ்வியல் நம்பிக்கைகளும் கபிலரால் காட்சிப்படுத்தப்படுவது இன்புறுதற்குரியதாகும். இத்தகைய ஒழுக்கம் சார்ந்த வாழ்வியல் ஊடாக சங்ககால சமூகம் நல்லிணக்கத்தோடு வாழ்ந்திருந்தமையை விளங்கிக்கொள்ள முடிகிறது.

**கொடையும் நல்லிணக்கமும்**

வறியவருக்கு கொடுத்தல் கொடை எனப்படும். இதனை வழங்குவதன் ஊடாக பொருளைப் பெற்றவருக்கும் மற்றும் கொடுப்பவருக்கும் இடையே நல்லிணக்கம் காணப்படும். இவ்வாறான சிந்தனைகளை சங்ககால சமூக வாழ்வியல் மூலமாக அறிந்து கொள்ளலாம். குறிப்பாகஅதியமான் நெடுமானஞ்சயின் கொடைச் சிறப்பைப் பற்றி கூறும் விதமாக,

**“ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பன்னாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ”**
**(புறநானூறு, பா.எண்.101)**

இப்பாடலின் மூலம் அதியமான அரசவைக்கு பரிசில் பெற வேண்டி வரும் புலவர்க்கு ஒரு நாள் முந்தைய நாள் கொடையை விட அதிகமாக தரப்பட்டுள்ளமை சிறப்பித்துக் கூறுவதாக அமைகிறது.

வேள் பாரியின் கொடை பண்பைப் பற்றி புலவர் கபிலர் மழையைப் போல கைம்மாறு ஏதும் கருதாது கொடையை வழங்குபவன் என்று உயர்வுபடுத்திச் சிறப்பித்துக் கூறுகிறார்.

**"பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவர்ப் புகழ்வர்**
**செந்நாப் புலவர் பாரி ஒருவனும் அல்லன்"**
**மாரியும் உண்டு ஈண்டு உலக புரப் பதுவே**
**(புறநானூறு, பா.எண்.107)**

பாரியின் வள்ளத் தன்மையை பாடுவதாக

**"பறம்பு பாடினர் அதுவே அறம் புண்டு**
**பாரியும் பரிசிலர் இரப்பின்**
**(புறநானூறு, பா.எண்.108)**

பறம்பு மலையை பரிசாக பங்கிட்டு கொடுத்ததை இதன் மூலம் அறிய முடிகிறது. மன்னன் மலையமான் திருமுடிகாரியின் கொடை கொடுக்கும் அளவு பற்றி குறிப்பிடுகிறது.

**"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**
**பலரும் வருவர் பரிசில் மாக்கள்**
**வரிசை அறிதலோ அரிதே பெரிதும்**
**ஈதல் எளிதே மாவண் தோன்றல்**
**அது நற்கு அறிந்தனை யாயின்**
**பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே"**
**(புறநானூறு, பா.எண்.121)**

இப்பாடலில் தன்னைத் தேடி வருகின்ற புலவருக்கு பரிசில் வழங்கும் முன் அவர் தம் தகுதியை நன்கு அறிந்து அதற்கு ஏற்ப பரிசு வழங்குவது என்று கபிலர் கூறுவதன் மூலமாகபரிசில் பெறவேண்டி வந்த இரவலர்க்கு அளக்காது பரிசு வழங்கியமையை அறிய முடிகிறது.

**"........ ஈத்த இழையணி நெடுந்தேர்**
**பயன்கெழு முள்ளூர் மீமிசைப்**
**பட்ட மாரி உறையினும் பலவே"**
**(புறநானூறு, பா.எண்.123)**

இப்பாடலில் வருகின்ற இரவலர்க்கு பரிசாக தேரையும் கொடுத்தான் திருமுடிக்காரி என்று இதன் மூலம் அவனது கொடைச்சிறப்பு வலியுறுத்தப்படுகிறது.

புலவர்கள் பாடிப் பரிசில் வழங்கச் செல்லும் முன் நாள், கிழமையும் சரியல்ல என்றும் தீமை தரும் என உணர்ந்தும் சகுனங்களைப் பார்த்தும் அன்றைக்கும் மலையமான் காரியின் அவைக்கு சென்றாலும் திறன் சொல்லால் பாடினாலும் அவன் பரிசில் தருவான் என்று கூறுவதன் மூலம் புலவர்கள் பரிசில் பெறுவதற்கு நாள், கிழமை பார்த்தனர் என்பதும் தெரிகிறது.

**ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**(புறநானூறு, பா.எண்.204)**

என ஈகையை போற்றிய மனிதர் வாழ்ந்த காலம் சங்ககாலம்.

**"..செல்வத்து பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புரு பலவே"**
**(புறநானூறு, பா.எண்.189)**

என செல்வம் படைத்ததன் பயனே பிறர்க்கு கொடுத்ததால்தான் என்பதை மதுரைக் கணக்காயனார் நக்கீரனார் வலியுறுத்துகிறார்.

**"வரிசைக்கு வருந்தும்இப்பரிசில் வாழ்க்கைப்**
**பரிசிலர்க்கு அடையா வாயிலோயே..**
**எத்திசை செலினும் அத்திசைச் சோறே"**
**(புறநானூறு, பா.எண்.206)**

எனப் பரிசில் பெற காலம் தாழ்த்திய அதியமான்நெடுமான் அஞ்சியை நோக்கி ஔவையார் பாடுகிறார். எங்கு செலினும் கொடையுள்ளம் படைத்த மன்னர்களே இருப்பர் என ஔவையார் கூறுவது அந்தநாள் மன்னர்களின் கொடையுள்ளத்தின் மாண்பைக் காட்டுகிறது.

### சமய நல்லிணக்கமும் சமூக நல்லிணக்கமும்

சங்ககாலத்தில் புலவர்கள் மட்டுமன்றி அக்கால சமயங்களும் சமூக நல்லிணக்கத்திற்கு வழிவகுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. போருக்கு சென்றவர்களுக்காகவும்

செல்பவர்களுக்காகவும் இறந்தவர்களுக்காவும் கொற்றவை எனும் தெய்வத்தை வழிபடும் மரபு காணப்பட்டருந்ததாக அறிய முடிகிறது. சங்ககால வழிபாட்டு முறையில் ஆரியர் வழிபாட்டு முறையும் கலந்து காணப்பட்டது. இது ஆரிய திராவிட சமூக சமய நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக அது அமைந்தது எனலாம். அந்தவகையில் சங்க இலக்கியங்களில் யவனரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற நூல்களில் யவனரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

## முடிவுரை

எனவே மேற்படி ஆய்வின் வழிசங்ககால மக்களின்வாழ்வியலானதுதம்இனத்திற்காக கடமையாற்றியும் ஒற்றுமையாகவும் சாதி சமயம் கட்டுப்பாடுகள் இல்லாது கொண்டும் கொடுத்தும் நல்லிணக்கத்தோடு வாழ்ந்திருந்தமையை அறிய முடிகிறது. அவர்கள் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்கின்ற போது அங்கு சமூகம் ஒழுங்கமைக்கப்படுகின்றது மற்றும் அங்கேசமூகம் ஒழுங்கமைக்கப்படுகின்ற வேளை சிறப்பாக நல்லிணக்கம் ஏற்பட்டிருந்தமையை சங்ககால இலக்கியங்கள் ஊடாக அறியமுடிகின்றது.

சங்ககால மக்களின் வாழ்வு பெரும்பாலும் சமயம் சார்ந்ததாக இல்லாவிட்டாலும் மாறாக நல்லிணக்கம் சார்ந்ததாகவே காணப்பட்டது. தொண்டு செய்வதிலும் உலக மக்கள் நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நிலையும் பேணப் பட்டது. அன்பே உலகின் அடிநாதமாக காணப்பட்டது. ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் தன்மையை ஆற்றுப்படை இலக்கியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒரே குடும்பம் ஒற்றுமையாக வாழ்கின்ற போது அங்கே சமூகத்திலும் ஒற்றுமையும் புரிந்துணர்வும் காணப்பட்டமை சிறந்த நல்லிணக்கத்திற்கான அடித்தளத்தை புலப்படுத்துகின்றது.

ஆகவே சங்ககால இலக்கியங்களிலே ஒற்றுமை, கொடை, அன்பு, சமத்துவம், இரங்குதல், சமாதானம், புரிந்துணர்வு, ஆற்றுப்படுத்தல் போன்ற நல்லிணக்க உத்திகளைத் தம்மகத்தே கொண்டு, கொண்டும் கொடுத்தும் வாழ்கின்ற சமுதாயமாக ஒவ்வொரு நிலத்துக்குமுரிய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து இன்பமாக, ஒருவரோடு ஒருவர் நல்லிணக்கமாக வாழ்ந்திருந்தமையை அக்கால இலக்கியங்கள் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது.

## உசாத்துணைகள்


1. இராகவையங்கார், ரா., (1947), குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
2. இந்திரசித்து, க., (2004), தமிழ் அறிஞர்களும், இலக்கியங்களும், ரேவதி பதிப்பகம், சென்னை.
3. கிருஷ்ணராஜா, சோ., (1979), சங்க காலச் சமூகமும் சமய மெய்யியற் சிந்தனைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. சண்முகப்பிள்ளை, மு., (1996),சங்கத் தமிழர்களின் வழிபாடும் சடங்குகளும், உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.
5. சந்திரன், ஸ்ரீ., (2001), மணிமேகலை மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
6. சாமிநாத அய்யர், உ, வே., (தொகுப்பு), (1931), மதுரைக்காஞ்சி, கேசரி அச்சுக்கூடம், சென்னை.
7. சுப்பிரமணியன், ச.வே., (2010), தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
8. துரைசாமிப்பிள்ளை, சு., ஔவை, (2008), செவ்விலக்கியக் கருவூலம் - 2, நற்றிணை - 1, 2, 3, 4, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை.

9. பாலசுப்பிரமணியன், கு.வெ., (1994), சங்கஇலக்கியத்தில்சமூகஅமைப்புக்கள், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவுர்.
10. புலியுர்க்கேசிகன், (உரை), (2004), புறநானூறு தெளிவுரை, பாரி நிலையம், சென்னை.
11. புலியுர்க்கேசிகன், (உரை), (2001), நற்றிணை, பாரி நிலையம், சென்னை.
12. புலியுர்க்கேசிகன், (உரை), (2010), திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
13. வித்தியானந்தன், சு., (1954), தமிழர் வாழ்வு, தமிழ் மன்றம், கண்டி.
14. ஜெயரஞ்சித், எ., (2011), தமிழகத் தமிழ் இலக்கிய வரலாறு, பாரதி கல்வி வட்டம், வள்ளுவர் கலைக்கூடம், புதுக்குடியிருப்பு.